DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, AMBATTUR
TIRUVALLUR DISTRICT

**STC.No.137/2024**
Deposition of Witness for – Prosecution : PW1
Defence:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : விஜயலட்சுமி | | : |
| த/பெ | : ஈஸ்வரராவ் | மதம் | : |
| கிராமம் | : அம்பத்தூர் | தொழில் | : இல்லத்தரசி |
| வட்டம் | : சென்னை | வயது | : 55/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of Date

---

**தேதி – 21.07.2026**

**<u>குறுக்கு விசாரணை:</u> PW1**

1. நான் ITI Diploma வரை படித்துள்ளேன். புகார் மனு, வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள அனைத்து விவரமும் நன்கு தெரியும். எதிரியானவர் எங்கள் பொதுநண்பர் கிருஷ்ணவேணி மூலம் அறிமுகமானார். வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் புகார் மனுவில் கிருஷ்ணவேணி மூலம் எதிரி அறிமுகன் என்ற விவரம் கூறவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கானது சீட்டுத்தொகைக்காக போடப்பட்டது கடனிற்காக தாக்கல் செய்யவில்லை. எதிரி தான் சீட்டு பிடித்தார். 2012 ல் எதிரி அறிமுகமானார் 2013 ஜனவரியில் அவரிடம் சீட்டு போட்டேன். எத்தனை நபர்கள் சேர்ந்து எதிரியிடம் சீட்டு போட்டோம் என்றால் 5 லிருந்து 6 நபர்களை எதிரியின் சீட்டில் சேர்த்துவிட்டேன். நான் எதிரியிட்டு சீட்டு போட்ட சமயத்தில் தற்பொழுதுள்ள அதே சொந்த வீட்டில் தான் எதிரி வசித்து வந்தார். 2013 ல் நான் ரூ.2,00,000/–, ரூ.1,00,000/– மற்றும் ரூ.50,000/– மூன்று தொகைக்கான சீட்டிலும் சேர்ந்திருந்தேன். நான் 10 மாதம் சீட்டில் சேர்ந்தேன். 10 மாதம் போடப்பட்ட சீட்டின் தொகை எடுத்தேனா என்றால் எதிரி தரவில்லை. 10 மாதம் சீட்டு

முடிந்து எதிரி சீட்டுத்தொகை தராததால் அவர் மீது சட்ட நடவடிக்கை எடுத்தேனா என்றால் நட்பு அடிப்படையில் நடவடிக்கை எடுக்கவில்லை. வழக்கறிஞர்அறிவிப்பில் 2013 ல் ஜனவரி மாதத்தில் 10 மாதம் சீட்டு போட்டதாகவும், அந்த தொகையை தரவில்லை என்றும், அவர் மீது சட்டநடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்ற விவரம் தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. எதிரி எந்த சீட்டும் நடத்தவில்லை அவரிடம் நான் எந்த சீட்டும் போடவில்லை வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2. எதிரியிடம் சீட்டு தவணை செலுத்தியதற்கு எவ்வளவு தள்ளு போய் சீட்டு தொகை எடுத்தேன் என்ற விவரத்தை ஆவணத்தில் எழுதி வைத்துள்ளேனா அல்லது ரசீது ஏதேனும் உள்ளதா என்றால் ஞாபகமில்லை, வீட்டில் பார்க்கவேண்டும். புகார் மனுவில் எதிரியிடம் எடுத்ததாக சொல்லப்படும் மூன்று சீட்டின் விவரம் குறித்து தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். ஜனவரி மாதம் 2013 ல் ஒரு சீட்டு போட்டேன் முடிந்த பின்பு மற்றொரு சீட்டு 10 மாதத்திற்கு எதிரியிடம் சேர்ந்தேன். இரண்டாவது முறை எதிரியிடம் போட்ட சீட்டு ஆகஸ்ட் மாதம் 2014 ல் முடிந்தது என்றால் சரிதான். இரண்டாவது முறை போட்ட சீட்டிற்கும் சீட்டு தொகை எதிரியிடம் இருந்து வாங்கினேனா என்றால் இல்லை. காசோலை தொகையானது நான் செலுத்திய சீட்டு தொகை மட்டும் அல்ல நான் எதிரியிடம் சீட்டில் சேர்த்துவிட்ட மற்ற நபர்களின் சீட்டு தொகையையும் சேர்த்து தான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. புகார் மனுவில் நான் சேர்த்து விட்ட அனைத்து நபர்களுக்கும் சேர்த்து தான் இவ்வழக்கு தாக்கல் செய்ததாக தெரிவித்துள்ளேனா என்றால் தெரிவித்துள்ளேன். ஜனவரி 2013 லிருந்து ஆகஸ்ட் 2014 வரை மொத்தச்சீட்டு தொகை ரூ.7,00,000/- லிருந்து

ரூ.8,00,000/– வரை இருக்கும். 2013 லிருந்து 2014 வரை சீட்டு தொகை தராததற்கு எதிரி மீது சட்ட நடவடிக்கை ஏதேனும் எடுத்தேனா என்றால் இல்லை. ஆகஸ்ட் 2014 ற்கு பிறகு நான் சேரவில்லை, எனக்கு தெரிந்த நபர்களை 10 மாத சீட்டில் சேர்த்து விட்டேன் அவர்கள் செலுத்திய சீட்டு தொகை ரூ.4,00,000/– லிருந்து ரூ.5,00,000/– இருக்கும். நான் சேர்த்து விட்ட அனைவருக்கும் சேரவேண்டிய பணத்திற்காக தான் நான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

3. மற்ற நபர்கள் சீட்டு தொகையில் அல்லாமல் கைமாத்தாகவும் பணம் கொடுத்துள்ளார்கள் அதற்காகவும் தான் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 2014 ல் சீட்டில் சேர்ந்த நபர்களுக்கு சிட்டு தொகை எதிரி திருப்பி தராத நிலையில் மீண்டும் சீட்டில் நபர்களை சேர்த்து விட்டேனா என்றால் 3 அல்லது 4 நபர்களை சிறு தொகை சீட்டில் சேர்த்துவிட்டேன். இது போன்று 2016 வரை எனக்கு தெரிந்த பல நபர்களை சீட்டில் சேர்த்துள்ளேன். அதற்கு பின்பு யாரையும் சீட்டில் சேர்க்கவில்லை, கலந்தும் கொள்ளவில்லை. 2013 லிருந்து 2016 ஆம்ஆண்டு வரை சீட்டில் சேர்ந்துவிட்ட விவரத்தை வழக்கறிஞர் அறிவிப்பு, பிரமாண வாக்குமூலம் மற்றும் புகார் மனுவில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். புகார் மனு பக்கம் 5 ல் 2013 ல் சீட்டு போட்டதாக தெரிவித்துள்ளேன் எந்த மாதம் தேதி தெரிவித்துள்ளேனா என்றால் முதல் மாதம் என்று தெரிவித்துள்ளேன் தேதி இல்லை. இவ்வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றும் நான் கூறுவது போல் விவரம் எதுவும புகார் மனுவில் இல்லை என்றால் சரியல்ல. புகார் மனு பக்கம் 5 ல் பத்தி 2ல் சீட்டு எந்த தேதி மாதம் மற்றும் வருடத்தில் நடத்தி வந்தார் என்ற விவரத்தை தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். புகார் மனு 09.08.2023 தேதியிட்ட காசோலை அந்த தேதியில் தரவில்லை என்றால் சரிதான். 09.08.2023 தேதியிட்டு எதிரி

காசோலை தரவில்லை என்றால் சரிதான். 2016 ஜனவரி மாதத்தில் வழக்கு 2 காசோலை எதிரி கொடுத்தார். 2016 ஜனவரி மாதத்தில் கொடுத்த காசோலை 3 மாதத்தில் செலுத்தவேண்டும் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும், ஆகையால் தான் எதிரி தேதி போடாத காசோலை கொடுத்தார், சொல்லும் நேரத்தில் தேதி போடுமாறு எதிரி கூறினார். 2016 ஜனவரி மாதத்திற்க 3 மாதம் கழித்து எத்தனை முறை எதிரியை சென்று பார்த்தேன் என்றால் பலமுறை பார்த்தேன். 3 மாதம் கழிந்த பிறகு புது காசோலை எதிரியிடம் கேட்டு வாங்கினேனா என்றால் இல்லை.

4. எதிரி என் மீது காவல் நிலையத்தில் பிப்ரவரி மாதத்தில் புகார் கொடுத்தார். நான் தனிப்பட்ட முறையில் எதிரி மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததேனா என்றால் இல்லை. போலிஸ் விசாரணையில் எனது தரப்பு விளக்கத்தை தெரிவித்தேன். இரண்டு காசோலை தவிர எதிரியிடம் வேறு ஆவணம் எதுவும் வாங்கவில்லை என்றால் சரிதான். 2018 ல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த பின்பு எதிரியிடம் எழுத்து பூர்வமான ஆவணம் ஏதேனும் எழுதி வாங்கினேனா என்றால் இல்லை. வழக்கு காசோலை எதிரி கொடுத்த சமயத்தில் பு.சா.ஆ.3 உறுதி மொழி கடன் பத்திரம் எழுதி கொடுத்தார். பு.சா.ஆ.3 அசல் ஆவணம் இல்லை, நகலாகும். இவ்வழக்கிற்காக நானே கடன் பத்திரம் தயார் செய்து கையெழுத்து நானாகவே போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு காசோலையில் உள்ள கையெழுத்தும் கடன் பத்திரத்தில் உள்ள கையெழுத்தும் வேவ்வேறாக உள்ளது என்றால் எதிரி கையெழுத்து தான். காசோலையில் உள்ள தனலட்சுமி பெயருக்கும் கடன் பத்திரத்தில் எழுதப்பட்டுள்ள தனலட்சுமி பெயருக்கும் எழுத்தில் வித்தியாசம் உள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் என்னை தவிர வேறு சாட்சிகள் விசாரிக்க உள்ளேனா என்றால் இருக்கார்கள். பு.சா.ஆ.3 கடன் பத்திரம் எதிரி

தயாரித்திருந்தால் இப்படிக்கு என்ற இடத்தின் கீழ் கையெழுத்து செய்திருப்பார் இடைவெளிவிட்டு கையெழுத்து செய்ததால் ஜோடிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. சீட்டு பணத்திற்காக போடப்பட்ட வழக்கு என்று தெரிவித்துள்ளேன், ஆனால் பு.சா.ஆ.3 கடன் பத்திரம் என்று போடப்பட்டுள்ளது என்றால் சீட்டு பத்திரம் என்று யாரும் போடமாட்டார்கள் ஆகையால் தான் கடன் பத்திரம் என்று போடப்பட்டது. பு.சா.ஆ.3 10.02.2016 ல் பூர்த்தி செய்யப்பட்ட கடன் பத்திரத்தில் காசோலை எண். 012481 மற்றும் 012482 என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. நான் இந்நீதிமன்றத்தில் இரண்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் ஒவ்வொரு வழக்கும் தலா ரூ.10,00,000/– த்திற்கான காசோலை வைத்து தாக்கல் செய்துள்ளேன். அந்த கடன் பத்திரத்தில் ரூ.10,00,000/– வீதத்திற்கு இரண்டு காசோலை தரப்பட்டதாக காணப்படுகிறது. காசோலை கொடுத்து 3 மாதத்தில் வங்கியில் செலுத்தியிருக்க வேண்டும் அவ்வாறு செய்யாததால் இவ்வழக்கு நிலைக்கக்கூடியத்தல்ல என்றால் சரியல்ல. பு.சா.ஆ.3 10.02.2016 ல் பூர்த்தி செய்யப்பட்டதால் 3 ஆண்டிற்குள் சட்ட நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும் என்றும் அதற்குள் எடுக்காததால் அந்த பத்திரமானது காலாவதியாகிவிட்டது என்றால் சரியல்ல. காசோலை கொடுத்து 7 ஆண்டு 5 மாதம் கழித்து தான் தேதியிட்டு காசோலையை வங்கியில் செலுத்தியுள்ளேன் என்றால் எதிரி தான் சொன்னார். நான் காசோலை மாற்றி தருமாறு பலமுறை கேட்டபோதும் அவர் அதே காசோலை போதும் என்று சொன்ன விவரத்தை எனது புகார் மனு, பிரமாண வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. புகார் மனு 1ம் பக்கத்தில் இருந்து 5ம் பக்கம் வரை உள்ள சீட்டு, Finance குறித்த சட்ட விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது அவை அனைத்தும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். புகார் மனு பக்கம் 10 ல் சீட்டு தொகை குறித்து தான்

தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். சிறுது சிறிதாக கைமாத்தாக பணம் கொடுத்தேன் என்று, புகார் மனு, பிரமாண வாக்குமூலம் மற்றும் வழக்கறிஞர் அறிவிப்பில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். கடன் பத்திரத்தில் எதிரியின் கணவர் அய்யனார் மற்றும் பெயர் தெரியாத நண்பர் சாட்சி கையெழுத்து செய்துள்ளார்.

6. சேகர், சரவணன் யார் என்றால் என்னை போன்று எதிரியால் பாதிக்கப்பட்டவர். என்னை போன்று சரவணன், சேகர் பாதிக்கப்பட்டவராக இருந்திருந்தால் எதிரிக்காக அவர்கள் சாட்சி கையெழுத்து செய்யமாட்டார்கள் என்றால் சரிதான். கடன் பத்திரத்தில் சேகர், சரவணன் ஆகியோரின் சாட்சி கையெழுத்துள்து. எதிரியின் கணவர் சாட்சி கையெழுத்து இல்லை என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பில் பக்கம் 8 ல் சொத்து விவரம் தெரிவித்துள்ளேன் அது யாரின் சொத்து என்றால் எதிரி வசிக்கும் வீட்டின் சொத்து விவரம் ஆகும். பத்தி 8 ல் உள்ள சொத்து விவரங்களை எனது கணவர் லெனின் நகர் Association ல் Secretary ஆக உள்ளதால் எதிரியின் முகவரி வைத்து சர்வே எண்னுடன் அனைத்து விவரமும் வாங்கினார். அதை வைத்து தான் வழக்கறிஞர் அறிவிப்பில் தெரிவித்துள்ளேன். 2013 ல் சீட்டு தவிர கடன் ஏதேனும் வாங்கியுள்ளாரா என்றால் ரூ.50,000/-, ரூ.20,000/- கைமாத்தாக வாங்கியுள்ளார். 2013 ல் ரூ.50,000/-, ரூ.20,000/- கடன் வாங்கியதாகவும், அதை திருப்பி செலுத்திவிட்டு ரூ.2,00,000/- வாங்கியதாகவும், அதற்கு பாதுகாப்பிற்காக எதிரியின் காசோலை 2 மற்றும் அவரது கணவரின் காசோலை இரண்டும் மற்றும் RC BOOK கொடுத்தார் என்றால் எதிரியின் கணவர் பெயரில் உள்ள RC Book மட்டும் கொடுத்தார். அசலுடன் வட்டியும் செலுத்திய பின்பு பாதுகாப்பிற்காக கொடுத்த ஆவணங்களை திருப்பி கேட்டபொழுது வீடு காலி செய்துள்ளதாவும், பின்னிட்டு தருவதாக கூறி தற்பொழுது தவறாக

பயன்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. 2013 ஆம் ஆண்டிற்கு பின்பு எனக்கும் எதிரிக்கும் இடையே எந்த ஒரு கொடுக்கல் வாங்கல் இல்லை என்றால் சரியல்ல. இந்நாள் வரை எதிரியின் கணவரின் RC Book எனது பாதுகாப்பில் தான் உள்ளது என்றால் சரிதான்.

7. பாதுகாப்பிற்காக கொடுத்த காசோலையை தவறாக பயன்படுத்தி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. Rc Book என் வசம் தான் உள்ளது, 6 மாதம் அல்லது 1 ஆண்டில் அந்த வாகனத்தை எதிரி விற்றுவிட்டார் பணமும் தரவில்லை. இந்நாள் வரையில் காசோலை மற்றும் Rc Book என் வசம் உள்ள விவரத்தை புகார் மனு, வழக்கறிஞர் அறிவிப்பில் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

MAHASAKTHI K

Digitally signed by MAHASAKTHI K